# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற

# இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் 2-வது நாள் காட்சிகள்!







கழக இளைஞர் அணி சார்பில், நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில், ‘வரலாறு கற்போம்’ எனும் தலைப்பில் இளம் பேச்சாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை என்ன என்பதை கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி தனக்கே உரிய பாணியில் பாடல்களோடும் நகைச்சுவை கலந்தும் மிகச்சிறப்பாக விளக்கினார்.




சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் 2வது நாளாக நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில் உலகத் தத்துவங்கள் மற்றும் தலைவர்கள் குறித்து, தத்துவம் தெளிவோம், தலைவர்கள் அறிவோம் எனும் தலைப்பில் திராவிடர் கழகப் பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி செரிவான கருத்துகளை வழங்கி மிகச்சிறப்பான உரை ஆற்றினார்.





கழக இளைஞர் அணி சார்பில், இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமின் ஒரு பகுதியாக, ‘கேட்க அதற்குத் தக!’ எனும் தலைப்பில் திராவிட இயக்கம் குறித்த மிகச்சிறப்பான வினாடி – வினா நிகழ்ச்சியை, கழகத் தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் மிக நேர்த்தியாக நடத்தினார்.

### மக்கள் வரிப்பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம்!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலடி!

சென்னை, பிப். 19 - மக்கள் வரிப் பணத்தை வைத்து பா.ஜ.க. அரசியல் செய்கிறது என்பதற்கு ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சே உதாரணம் என்று அமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் தியாக ராஜன் பதிலடி கொடுத் துள்ளார்.

அது வருமாறு: -

பல 10 ஆண்டுகளாக தேசிய அளவில் கல்வி யில் சிறந்த விளைவு எங்கு கிடைக்கிறது எத்தனை சதவிகிதம் படிக்கிறார்கள் எத்தனை நபர்கள் பட்டதாரிகள் ஆகிறார்கள் என்ற எந்த ஒரு அளவுகோல் எடுத் தாலும் பொதுவாக தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ்நாட் டில் உயர்ந்த இடத்தில் இருக்கிற சூழ்நிலையில் டெல்லியில் கல்விக் கொள்கையினை உரு வாக்கி பீகாரிலோ, ராஜஸ்தானிலோ, ஏன் குஜராத்திலோ தமிழ் நாட்டை ஒப்பிடுகை யில் பாதி அளவிற்கு வர முடியாத மாநிலங்களில் பெரும்பான்மை பெற்ற ஒரு கட்சியும் அதனால் உருவாக்கப்பட்ட ஒரு அரசாங்கமும் அவர் களை விட 10 மடங்கு முன்னேறிய மாநி லத்தை நாங்க சொல்ற கொள்கையைத்தான் நீங்கள் பின்பற்ற வேண் டும் என சொல்வது உல கத்திலேயே ஆச்சர்ய மாக இருக்கிறது. இதனை அதிர்ச்சி உரு வாக்கும் செயலாகத் தான் பார்க்க வேண்டும்.

பேரறிஞர் அண்ணா கூறிய படி தமிழ்நாடு கேரளா உள்ளிட்ட மாநி லங்களில் இரண்டு மொழிக்கொள்கை இரு மொழிக்கொள்கையை சிறப்பாக செயல்படுத்தி உலக அளவில் இன் றைக்கு நம் இளைஞர்கள் பல சிறந்த பணிகளிலும் அரசு உயர் பொறுப்பு களிலும் இருக்கிறார்கள்.

நமது கல்வித்திட்டத் தில் இருமொழிக்கொள் கையில் குறை மட்டும் இல்லை என்பதைத் தாண்டி நிறை இருக் கிறது என்பதை நிரூபித்துள்ளோம்.



இருமொழிக் கொள்கை கூட செயல் படுத்த முடியாத பல மாநிலங்களில் ஒரு மொழியை வைத்து அதையும் கூட சரியாக செயல்படுத்தாத மாநிலங்கள் நீங்கள் எங்களுடைய கொள்கையை தான் பயன்படுத்த வேண்டும் எனச்சொல்வது பொருத் தமற்றது இதையெல் லாம் தாண்டி சட்ட மைப்பின்படி மாநில அரசுக்கென சில உரிமை கள் இருக்கிறது. ஒன்றிய அரசிற்கு சில உரிமைகள் இருக்கிறது. சில பொது பட்டியலில் இருக்கிறது.

ஆனால் கொள்கை விருப்பமாக சட்டத்தில் இடம்பெறாத புதிய கல் விக் கொள்கையை கொண்டு வந்து விட்டு நீங்கள் ஏற்றுக் கொள் ளாவிட்டால் உங்க ளுக்கு ஜனநாயக முறைப்படி சட்ட மைப்பு படி 15 வது நிதிக் குழு படி தர வேண்டிய நிதியை தர முடியாது எனச்சொன்னால் இது கொடூரமான சர்வாதி காரி செய்யும் வேலை. மக்கள் வரிப்பணத்தை வைத்து அரசியல் செய்கி றோம் என்பதை ஒன் றிய அமைச்சர் தனது வாயாலே ஒப்புக் கொண்டு விட்டது நல்ல விஷயமாகும்.

முதலமைச்சர் சட்ட மைப்பில் எங்கே இடம் பெற்றுள்ளது என மிக தெளிவாக கேள்வி எழுப்பி உள்ளார்.

உச்சநீதிமன்றத்தில் இந்த விவகாரம் போய் நிற்க போகிறது. ஒரு மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் படி சட் டமன்றத்தில் நிறைவேற் றப்பட்ட பரிந்துரையை வழங்கப்பட வேண்டிய பணத்தை வழங்காமல் கட்டாயப்படுத்தி வெளிப்படையாக பேசி இருப்பது சட்டமைப் புக்கு விரோதமானது.

சட்டமைப்பால் நடத்தப்படுகிற ஒரு நாட்டில் ஒன்றிய அமைச்சரின் வார்த் தையை நீதிமன்றம் கண் டிக்கும் என நான் நம்பு கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித் துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் லிங்கம்பட்டி ஊராட்சியில் ரூபாய் 58.91 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள பார்வை குறைபாடு உள்ளோர் குறுந்தொழில்கள் குழுமக் கட்டிடத்தை திறந்தும், கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 11 நபர்களுக்கு ஆணைகள், 15 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட இரு சக்கர வாகனங்கள்,வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் 181 பயனாளிகளுக்கு கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வழங்கினார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பெ.கீதாஜீவன், அனிதா ஆர்.இராதா கிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, பொதுக் குழு உறுப்பினர் இரா.ரமேஸ், ஆனந்தசேகரன், ஒன்றியச் செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன், கருப்பசாமி, கோவில்பட்டி நவநீதகண்ணன், நகர் மன்ற உறுப்பினர் கு.தவமணி, நாகர்கோவில் மேயர் மகேஷ், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், எஸ்.கே.பேக்கர்ஸ் சம்பத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டு மையத்தில் நடைபெற்ற விழாவில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச்செயலாளருமான, கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை, நகராட்சி/மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு சேமநல நிதி சந்தா தொகைக்கான வட்டித் தொகை மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் மாநகராட்சிக்கு மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கினார். இதில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளருமான கீதாஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் கே.அன்னலட்சுமி, கோட்டுராஜா, கண்ணன், முன்னாள் மேயர் கஸ்தூரி தங்கம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.